ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

திகதி 2017.09.28

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - யூலை 2017

### பொதுநோக்கு

இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது நிதியியல் கணக்கிற்கான அதிகரித்த ஏற்றுமதிகள் மற்றும் உட்பாய்ச்சல்களினால் தொடர்ந்தும் மேம்பாடடைந்தது. எனினும், ஏற்றுமதி வருவாய் அதிகரித்தமைக்கு மத்தியிலும் உயர்ந்தளவான இறக்குமதிச் செலவினங்கள் காரணமாக, 2017 யூலையில் வர்த்தகப் பற்றாக்குறையானது 2016இன் இதையொத்த மாத காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் விரிவடைந்துள்ளது. யூலையில் தொழிலாளர் பணவனுப்பல்கள் அதிகரித்த வேளையிலும் சுற்றுலா வருவாய்கள் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது, கடந்த நான்கு மாதங்களில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிப் போக்கினை மாற்றியுள்ளது. அரச பிணையங்கள் சந்தை, அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் 3ஆம் கட்டப் பெறுவனவுகள் போன்றவற்றின் தேறிய உட்பாய்ச்சல்கள் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தொடர்ச்சியான சொத்துப்பட்டியல் முதலீட்டு உட்பாய்ச்சல்கள் ஆகியவற்றின் மூலம் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் வலுவடைந்தது.

### ஏற்றுமதிச் செயலாற்றம்

2017 மாச்சிலிருந்து அவதானிக்கப்பட்ட மேல் நோக்கிய தொடர்ச்சியான போக்கு, ஆண்டுக் காலப்பகுதியில் இரண்டாவது தடவையாக ஏற்றுதிகளிலிருந்தான வருவாய்கள் 2017 யூலையில் ஐ.அ.டொலர் 1 பில்லியனைக் கடந்து அதிகரித்தது. இதன்படி, 2017 யூலையில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,016 மில்லியனாகக் காணப்பட்டு ஆண்டுக்காண்டு வளர்ச்சியாக 13.9 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. ஏற்றுமதிகளிலான இவ்வளர்ச்சியானது பிரதானமாக கைத்தொழில் ஏற்றுமதிகளைத் தொடர்ந்து வேளாண்மை ஏற்றுமதிகளால் உந்தப்பட்டது.

2017 யூலையில் கைத்தொழில் ஏற்றுமதிகளான வருவாய்கள் ஐ.அ.டொலர் 757 மில்லியனுக்கு 11.6 (ஆண்டிற்கு ஆண்டு) சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு புடவைகள் மற்றும் ஆடைகளின் அதிகரித்த ஏற்றுமதிகளே வழிவகுத்தது. முன்னைய இரண்டு மாதங்களில் கொண்டிருந்த எதிர்மறையான வளர்ச்சியின் தலைகீழான போக்கினைச் சுட்டிக்காட்டி, புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2016 யூலையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 467 மில்லியனுக்கு 9.6 (ஆண்டிற்கு ஆண்டு) சதவீதத்தால் அதிகரித்து, ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மிக உயர்ந்த மாதாந்தப் பெறுமதியினைப்

பதிவுசெய்தது. 2017 மேயில் காணப்பட்ட ஜிஎஸ்பி+ வசதிகளின் மறுசீரமைப்பின் சாதகமான விளைவுகளின் காரணமாக 2017 யூலையில் ஐரோப்பிய சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 188 மில்லியனுக்கு 10.6 (ஆண்டிற்கு ஆண்டு) சதவீதத்தினால் அதிகரித்தது. இம்மாத காலப்பகுதியில், ஐக்கிய அமெரிக்கா மற்றும் பாரம்பரியற்ற சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதிகளும் (ஆண்டிற்கு ஆண்டு) முறையே 7.9 சதவீதத்தினாலும் (ஆண்டிற்கு ஆண்டு) 6.5 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, உணவு, குடிபானம் மற்றும் புகையிலை ஆகியவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் ஐ.அ.டொலர் 34 மில்லியனுக்கு (ஆண்டிற்கு ஆண்டு) 46.8 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. மேலும், 2017 யூலையில், அனைத்துத் துணைவகைகளின் மேம்பட்ட செயலாற்றத்தினைப் பிரதிபலித்து, இறப்பர் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 15.2 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தது. எண்ணெய்க்குதம் மற்றும் விமான எரிபொருள் ஆகியவற்றின் உயர்ந்தளவான ஏற்றுமதி அளவுகள் மற்றும் விலைகளின் காரணமாக 2017 யூலையில் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படை) 21.5 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. அதேவேளை, இரசாயன உற்பத்திகள் (வாசனைத்திரவியங்களால் உந்தப்பட்ட) அச்சிடல் உற்பத்திகள் (நாணயத் தாள்களினால் உந்தப்பட்ட) மற்றும் அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய ஆண்டின் இதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்துள்ளது. எனினும், தோல், பிரயாணப்பொருட்கள் மற்றும் காலணிகள் மற்றும் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் ஆகியவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2017 யூலை மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

2017 யூலையில், வேளாண்மை ஏற்றுமதிகலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 253 மில்லியனுக்கு 21.8 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) கணிசமானளவு அதிகரித்தமைக்குப் பிரதானமாக, தேயிலை ஏற்றுமதியில் பதிவு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க செயலாற்றமே காரணமாகும். உயர்ந்தளவான தேயிலை விலைகள் மற்றும் அளவுகளின் இணைந்த தாக்கத்தின் காரணமாக தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 143 மில்லியனுக்கு 32.7 சதவீதத்தால் (ஆண்டிற்கு ஆண்டு) குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. 2017 யூலையில் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலையானது 2016 யூலையில் காணப்பட்ட கிலோகிறாமொன்றிற்கான விலை ஐ.அ.டொலர் 4.19 இலிருந்து கி.கிறாமொன்றுக்கான விலை ஐ.அ.டொலர் 5.36ஆக 27.8 சதவீதத்தால் அதிகரித்ததுடன் 2016இன் இறுதியில் இது கி.கிறாமொன்றுக்கு ஐ.அ.டொலர் 4.86ஆகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது. 2017 யூலையில், தேயிலை ஏற்றுமதிக்கான அளவு 26.7 மில்லியன் கி.கிறாமிற்கு 3.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து இதுவரையான ஆண்டு காலப்பகுதியில் மிக உயர்ந்தளவான ஏற்றுமதி அளவினைப் பதிவுசெய்தது. மேலும், 2017 யூலையில், கடலுணவு உற்பத்தி ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 20 மில்லியனுக்கு 42.5 சதவீதத்தால் (ஆண்டிற்கு ஆண்டு) குறிப்பிடத்தக்களவு அதிகரித்து ஐரோப்பிய ஒன்றியச் சந்தைகளுக்கான ஏற்றுமதியில் 65.1 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. கடலுணவு ஏற்றுமதிகளில் காணப்படும் இந்தக் குறிப்பிடத்தக்கச் செயலாற்றமானது ஐரோப்பிய ஒன்றியத்திற்கான கடலுணவு ஏற்றுமதிகளின் தடையினை நீக்கியமை மற்றும் ஜிஎஸ்பி+ வசதிகளினை மீளப்பெறல் போன்றவற்றின் சாதகமான விளைவுகளைக் குறித்துக் காட்டுகின்றது. அதேவேளை, வாசனைத்திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் இம்மாத காலப்பகுதியில் 14.0 (ஆண்டிற்கு ஆண்டு) சதவீதத்தினால் அதிகரித்து அனைத்துத் துணை வகைகளிலும் உயர்ந்தளவை பிரதிபலித்தது. இருப்பினும், வேளாண்மை உற்பத்திகள், தேங்காய் துருவல் உற்பத்திகள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017 யூலையில் வீழ்ச்சியடைந்தன.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில், தேயிலை, போக்குவரத்துச் சாதனங்கள், பெற்றோலிய உற்பத்திகள், வாசனைத்திரவியங்கள் மற்றும் கடலுணவு ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட அதிகரித்த வருவாய்களின் காரணமாக, 2017இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 6,413 மில்லியனுக்கு 6.5 சதவீதத்தால் (ஆண்டிற்கு ஆண்டு) வளர்ச்சியடைந்தது. வேறுபடும் விதமாக ஒன்றுசேர்ந்த அடிப்படையில், புடவைகள் மற்றும் ஆடைகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும்

ஆபரணங்கள் மற்றும் தோல், பிரயாணப் பொருட்கள் மற்றும் கணனிகள் போன்றவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

2017இன் முதல் ஏழு மாதகாலப் பகுதியில், இலங்கைக்கான வணிகப் பொருள் ஏற்றுமதிக்கான முதன்மைச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 1: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)**

| வகை | யூலை 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | யூலை 2017 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) | சன - யூலை 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | சன - யூலை 2017 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **678.9** | **757.3** | **11.6** | **4,683.3** | **4,823.1** | **3.0** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 425.6 | 466.6 | 9.6 | 2,940.2 | 2,850.2 | (3.1) |
| இதில் ஆடைகள் | 405.2 | 441.1 | 8.8 | 2,782.3 | 2,685.8 | (3.5) |
| உணவுப் பொருட்கள் குடிபானம் மற்றும் புகையிலை | 22.8 | 33.5 | 46.8 | 196.8 | 224.3 | 14.0 |
| இறப்பர் உற்பத்திகள் | 68.2 | 78.5 | 15.2 | 440.2 | 467.1 | 6.1 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 30.1 | 36.6 | 21.5 | 162.4 | 213.5 | 31.5 |
| இரசாயனப் பொருட்கள் | 9.1 | 13.7 | 50.9 | 74.5 | 83.9 | 12.6 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 2.3 | 6.3 | 167.5 | 12.5 | 24.0 | 91.8 |
| அடிப்படை உலோகம் மற்றும் பொருட்கள் | 6.1 | 9.5 | 56.1 | 42.9 | 60.9 | 42.0 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 6.4 | 6.7 | 5.2 | 73.5 | 131.7 | 79.2 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 18.3 | 17.2 | (6.0) | 166.6 | 141.1 | (15.3) |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 19.6 | 12.8 | (34.8) | 101.2 | 90.5 | (10.6) |
| ஏனையவை | 70.4 | 75.9 | 7.8 | 472.4 | 535.9 | 13.4 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **207.9** | **253.3** | **21.8** | **1,312.6** | **1,559.7** | **18.8** |
| தேயிலை | 107.8 | 143.0 | 32.7 | 726.1 | 871.4 | 20.0 |
| கடலுணவு | 14.2 | 20.3 | 42.5 | 97.7 | 137.4 | 40.6 |
| வாசனைத்திரவியம் | 33.1 | 37.7 | 14.0 | 158.4 | 198.4 | 25.3 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 1.4 | 3.6 | 152.2 | 17.7 | 20.0 | 13.0 |
| தேங்காய் | 31.8 | 32.5 | 2.2 | 206.0 | 206.3 | 0.2 |
| இறப்பர் | 1.6 | 2.1 | 33.3 | 18.6 | 26.1 | 40.1 |
| மரக்கறிகள் | 3.1 | 2.3 | (26.3) | 16.3 | 16.9 | 3.7 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 14.9 | 11.8 | (21.1) | 71.8 | 83.2 | 15.9 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **4.7** | **5.3** | **11.0** | **25.9** | **30.6** | **18.2** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **891.5** | **1,015.9** | **13.9** | **6,021.8** | **6,413.4** | **6.5** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது.
(ஆ) திருத்தப்பட்டது.

**இறக்குமதிச் செயலாற்றம்**

முன்னைய ஆண்டின் இதையொத்த காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட குறைந்தளவான இறக்குமதிப் பெறுமதிகளின் அடிப்படைத் தாக்கத்தினைப் பிரதானமாகப் பிரதிபலித்து 2017 யூலையில் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்துள்ளது. இதன்படி, 2017 யூலையில் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,591 மில்லியன் ஆக விளங்கி 11.1 சதவீத (ஆண்டிற்கு ஆண்டு) வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்வளர்ச்சிக்கு இடைநிலைப்பொருட்கள் மீதான உயர்ந்தளவான செலவினங்களே பெரிதும் பங்களித்தன.

முக்கியமாக எரிபொருள், தங்கம் மற்றும் புடவைகள் மற்றும் புடவை பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிகள் மீதான அதிகரித்த செலவினத்தின் காரணத்தால், 2017 யூலையில் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 902 மில்லியனுக்கு 28.0 (ஆண்டிற்கு ஆண்டு) சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. 2017 யூலையில் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினங்கள் ஐ.அ.டொலர் 216 மில்லியனுக்கு 51.7 சதவீதத்தால் (ஆண்டிற்கு ஆண்டு) குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமைக்கு சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் உயர்ந்தளவான இறக்குமதிகளினால் பெரிதும் உந்தப்பட்டது. மேலும், பன்னாட்டுச் சந்தையில் எரிபொருளின் உயர்வான விலைகளின் தாக்கத்தின் பிரதிபலிப்புக்களுடன் இறக்குமதி அளவுகளில் ஓர் வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்ட போதிலும் 2017 யூலையில், மசகெண்ணெயின் இறக்குமதி மீதான செலவினம் 2.8 சதவீதத்தால் அதிகரித்தது. 2017 யூலையில் மசகெண்ணெய்க்கான சராசரி இறக்குமதி விலையானது 2016 யூலையில் காணப்பட்ட பீப்பாய் ஒன்றிற்கான கொள்வனவு விலை ஐ.அ.டொலர் 46.10 இலிருந்து பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 49.75 ஆக அதிகரித்தது. மேலும், இம்மாத காலப்பகுதியில் தங்க இறக்குமதிகள் மீதான செலவினங்கள் ஐ.அ.டொலர் 62 மில்லியனுக்கு 182.0 சதவீதத்தால் (ஆண்டிற்கு ஆண்டு) கணிசமானளவு அதிகரித்தமைக்கு தங்க இறக்குமதிகளின் அதிகரித்த அளவுகளே காரணமாகும். எதிர்வரும் காலப்பகுதியில் புடவைகள் மற்றும் ஆடைகளின் அதிகரித்த இறக்குமதிகளின் சாத்தியப்பாட்டினைக் குறித்துக்காட்டி துணி மற்றும் இழையங்கள் மீதான உயர்ந்தளவான செலவினங்களின் மூலம் புடவைகள் மற்றும் புடவை பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினங்கள் 2017 யூலையில் 19.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, ஆண்டு காலப்பகுதியில், அடிப்படை உலோகங்கள், கோதுமை மற்றும் சோளம் மற்றும் உணவு தயாரிப்புக்கள் போன்றவற்றின் உயர்ந்தளவான இறக்குமதிகள் இடைநிலைப்பொருட்கள் இறக்குமதிகளின் அதிகரிப்பு நோக்கிப் பெரிதும் பங்களித்தன. இருப்பினும், கனிம உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினங்கள் 2017 யூலையின் 67.6 சதவீதத்தால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்து 2016 யூலையின் சிமெந்துக் கட்டிகளின் உயர்ந்தளவான இறக்குமதிகளின் காரணமான அடிப்படை விளைவுகளைப் பிரதிபலித்தது.

அதேவேளை, உணவல்லாத நுகர்வுப்பொருட்களின் ஓர் வீழ்ச்சி காணப்பட்டமைக்கு மத்தியிலும் உணவு மற்றும் குடிவகைகளின் அதிகரித்த இறக்குமதி காரணமாக 2017 யூலையில் நுகர்வுப்பொருள் இறக்குமதி மீதான செலவினங்கள் ஐ.அ.டொலர் 334 மில்லியனுக்கு 3.4 சதவீதத்தால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தது. 2017 யூலையில் உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 10.2 சதவீதத்தால் (ஆண்டிற்கு ஆண்டு) வளர்ச்சியடைந்தமைக்கு அரிசி இறக்குமதி மீதான உயர்ந்தளவான செலவினங்களே பிரதான காரணமாகும். அதற்கிணங்க, சராசரி இறக்குமதி விலைகளில் குறைவொன்று காணப்பட்ட போதிலும், உள்நாட்டுச் சந்தையில் காணப்பட்ட பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்காக அரிசி இறக்குமதி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து அரிசியின் இறக்குமதியில் பதிவுசெய்யப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் காரணமாக இம்மாத காலப்பகுதியில் அரிசி இறக்குமதி மீதான செலவினம் தொடர்ந்தும் அதிகரித்தது. மேலும், உந்து ஈருளிகள் மற்றும் உந்து ஊர்திகளின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக 2017 யூலையில் தனிப்பட்ட ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினங்களும் 15.9 சதவீதத்தால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தது. அதேவேளை, இம்மாத காலப்பகுதியில், தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் மற்றும் வீட்டுத்துறை மற்றும் தளபாட வகைகள் மீதான இறக்குமதிச் செலவினங்களும் அதிகரித்தன. எனினும், 2017 யூலையில் வாசனைத்திரவியங்கள், சீனி,

காய்கறிகள் மற்றும் ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிச் செலவினங்கள் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

2017 யூலையில் முதலீட்டுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமானது ஐ.அ.டொலர் 352 மில்லியனுக்கு 12.7 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்து அனைத்துத் துணை வகைகளிலும் குறைந்தளவான இறக்குமதிகளைப் பிரதிபலித்தது. பொறி மற்றும் கருவிகளின் பகுதிகள், தொலைத்தொடர்பூட்டல் கருவிகள், வாசனைத்திரவியங்கள் மற்றும் வேளாண்மை சார் பொறிகள் ஆகியவற்றின் இறக்குமதிகளினலா வீழ்ச்சியின் மூலம் இம்மாத காலப்பகுதியில் பொறி மற்றும் கருவிகள் மீதான செலவினம் 13.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இக்காலப்பகுதியில் கட்டட மூலப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினங்களும் 8.0 சதவீதத்தால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தமைக்கு சிமெந்து, இரும்பு மற்றும் உருக்கு மற்றும் இரும்பு மற்றும் உருக்கிலான ஆபரணங்கள் ஆகியவற்றின் குறைந்தளவான இறக்குமதிகளே காரணமாகும். மேலும், 2017 யூலையின் போக்குவரத்து சாதனங்கள் மீதான இறக்குமதிச் செலவினங்கள் 20.9 சதவீதத்தால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தமைக்கு வர்த்தக நோக்கத்திற்கான தன்னியங்கி முச்சக்கரவண்டி மற்றும் வாடகை ஊர்திகள் போன்ற வீதி ஊர்திகளின் குறைந்தளவிலான இறக்குமதிகளே பிரதான காரணமாகும்.

இத்தகைய அபிவிருத்திகளைப் பிரதிபலித்து, ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் இறக்குமதிச் செலவினங்கள் ஐ.அ.டொலர் 11,742 மில்லியனுக்கு 9.2 சதவீதத்தால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தமைக்கு எரிபொருள், தங்கம் மற்றும் அரிசி போன்றவற்றிலான உயர்ந்தளவான இறக்குமதிகளே பிரதான காரணமாகும். எனினும், இம்மாத காலப்பகுதியில் பொறி மற்றும் கருவிகள், தனிப்பட்ட ஊர்திகள் மற்றும் வளமாக்கிகள் போன்றவற்றின் மீதான இறக்குமதிச் செலவினங்கள் வீழ்ச்சியடைந்தன.

2017இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் இந்தியா, சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர் மற்றும் யப்பான் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 59 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 2 - இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)**


| வகை | யூலை 2016 ஐ.அ.டொ. மில் | யூலை 2017 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) | சன - யூலை 2016 ஐ.அ.டொ. மில் | சன - யூலை 2017 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **323.4** | **334.5** | **3.4** | **2,431.1** | **2,558.4** | **5.2** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 120.8 | 133.1 | 10.2 | 896.5 | 1,056.6 | 17.9 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 1.1 | 24.2 | 2,077.6 | 12.1 | 162.3 | 1,242.2 |
| இதில் அரிசி | 0.5 | 23.3 | 4,428.6 | 6.4 | 155.1 | 2,327.3 |
| குடிவகைகள் | 6.9 | 8.4 | 20.7 | 49.4 | 47.2 | (4.4) |
| கடலுணவு | 17.8 | 18.3 | 2.9 | 139.2 | 129.1 | (7.2) |
| எண்ணெய் மற்றும் கொழுப்பு | 3.6 | 2.8 | (21.4) | 20.8 | 27.4 | 31.2 |
| மரக்கறிகள் | 29.7 | 26.2 | (11.9) | 228.1 | 202.9 | (11.0) |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 22.5 | 18.9 | (15.9) | 156.2 | 169.6 | 8.6 |
| வாசனைத் திரவியம் | 9.8 | 5.6 | (42.4) | 76.7 | 56.3 | (26.6) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 29.4 | 28.7 | (2.3) | 214.0 | 261.8 | 22.3 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 202.6 | 201.3 | (0.6) | 1,534.6 | 1,501.7 | (2.1) |
| ஊர்திகள் | 53.6 | 62.2 | 15.9 | 472.9 | 432.4 | (8.6) |
| தொலைத்தொடர்புக் கருவிகள் | 16.1 | 18.7 | 15.6 | 132.3 | 151.9 | 14.8 |
| மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 45.4 | 41.7 | (8.2) | 309.7 | 290.4 | (6.2) |
| ஆடைகள் மற்றும் துணைப் பொருட்கள் | 29.2 | 22.4 | (23.3) | 201.2 | 221.2 | 10.0 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 58.3 | 56.5 | (3.1) | 418.5 | 405.9 | (3.0) |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **704.7** | **901.8** | **28.0** | **5,485.1** | **6,250.9** | **14.0** |
| எரிபொருள் | 142.3 | 215.9 | 51.7 | 1,320.2 | 1,840.4 | 39.4 |
| இதில் மசகெண்ணெய் | 33.9 | 34.8 | 2.8 | 301.6 | 314.2 | 4.2 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 106.9 | 180.7 | 69.1 | 920.5 | 1,355.0 | 47.2 |
| நிலக்கரி | 1.6 | 0.4 | (78.1) | 98.1 | 171.2 | 74.5 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 32.5 | 72.1 | 121.8 | 245.5 | 400.1 | 63.0 |
| இதில் தங்கம் | 22.1 | 62.4 | 182.0 | 167.7 | 337.4 | 101.2 |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 198.0 | 236.9 | 19.7 | 1,544.7 | 1,543.9 | (0.1) |
| அடிப்படை உலோகங்கள் | 25.0 | 48.8 | 94.9 | 215.2 | 300.7 | 39.7 |
| கோதுமை மற்றும் சோளம் | 8.3 | 31.4 | 277.9 | 141.4 | 193.9 | 37.2 |
| உணவுத் தயாரிப்புக்கள் | 20.5 | 30.6 | 49.2 | 136.9 | 177.4 | 29.6 |
| வளமாக்கி | 3.8 | 10.6 | 182.0 | 78.6 | 49.7 | (36.8) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 4.2 | 4.7 | 12.0 | 37.0 | 31.7 | (14.2) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பகுதிகள் | 49.3 | 48.8 | (1.1) | 346.0 | 351.4 | 1.6 |
| கனிம உற்பத்திகள் | 46.0 | 14.9 | (67.6) | 128.2 | 108.7 | (15.2) |
| ஏனையவை | 174.7 | 187.1 | 7.1 | 1,291.4 | 1,252.9 | (3.0) |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **403.1** | **351.9** | **(12.7)** | **2,829.9** | **2,799.0** | **(1.1)** |
| பொறி மற்றும் கருவிகள் | 224.7 | 195.0 | (13.2) | 1,596.5 | 1,514.0 | (5.2) |
| கட்டடப் பொருட்கள் | 120.9 | 111.3 | (8.0) | 881.6 | 900.9 | 2.2 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 57.0 | 45.1 | (20.9) | 347.9 | 378.9 | 8.9 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.6 | 0.5 | (1.1) | 3.8 | 5.3 | 38.3 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **1.6** | **3.0** | **91.1** | **7.7** | **133.9** | **1,628.4** |
| **மொத்த இறக்குமதி** | **1,432.8** | **1,591.1** | **11.1** | **10,753.8** | **11,742.2** | **9.2** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

## வரைபடம் 1: ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம்





மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

### வர்த்தக நிலுவை

2017 யூலையில் வர்த்தக நிலுவையின் பற்றாக்குறை 2016 யூலையின் ஐ.அ.டொலர் 541 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 575 மில்லியனுக்கு விரிவடைந்தது. அதேவேளை, 2017இன் முதல் ஏழுமாத காலப்பகுதிக்கான ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறை 2016இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4,732 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 5,329 மில்லியனுக்குக் விரிவடைந்தது.

## வரைபடம் 2: மாதாந்த வர்த்தக நிலுவை




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**

2017 யூலை காலப்பகுதியில், சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 205,482 சுற்றுலாப் பயணிகளின் வருகையின் மூலம் ஆண்டுக்குஆண்டு அடிப்படையில் 1.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதல் ஏழுமாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2016இன் இதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 1,215,926 சுற்றுலாப் பயணிகளை பதிவுசெய்து 3.6 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்களாக இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்சு விளக்கி இக்காலப் பகுதியின் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 51.4 சதவீதத்திற்கு வகைகூறின. சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் ஒரேமாதிரியான போக்கினைத் தொடர்ந்து 2017 யூலை காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான[1] வருகைகள் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. இதன் காரணமாக, இம்மாத காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 352.5 மில்லியனாக விளங்கிய வேளையில், ஆண்டின் முதல் ஏழுமாத காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான ஒன்றுசேர்ந்த வருவாய்கள் 2016 இதையொத்த காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 2,013.5 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2,086.1 மில்லியனாக அதிகரித்தது.

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**

கடந்த நான்கு மாதகாலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட போக்கினைமாற்றி, 2017 யூலையில்[2] தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 592.1 மில்லியனாக விளங்கி ஆண்டுக்காண்டு அடிப்படையில் 3.4 சதவீதமானதொரு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. எனினும், 2017இன் முதல் ஏழுமாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களின் ஒன்றுசேர்ந்த உட்பாய்ச்சல்கள் 2016இன் இதையொத்த காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 4,185.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,946.7 மில்லியனுக்கு 5.7 சதவீத வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

**நிதியியல் பாய்ச்சல்கள்**

2017இன் முதல் ஏழுமாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் இரண்டாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 169.3 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்கள் மற்றும் முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 83.4 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சல்கள் என்பனவற்றை உள்ளடக்கி ஐ.அ.டொலர் 252.7 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலினைப் பதிவுசெய்தன. அரச பிணையங்கள் சந்தையில், வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய உட்பாய்ச்சல், 2017 யூலை காலப்பகுதியில் 134.6 மில்லியன் தேறிய உட்பாய்ச்சலை பதிவுசெய்தது, எனினும் ஒன்றிணைந்த அடிப்படையில், 2017இன் முதல் ஏழு மாதங்களிலும் அரச பிணையங்கள் சந்தை 18.4 மில்லியன் தேறிய வெளிப்பாய்ச்சலைக் கொண்டிருந்தது. கூட்டிணைக்கப்பட்ட கடன்களிலிருந்தான வருமானங்களை உள்ளடக்கிய அரசிற்கான நீண்டகாலக் கடன் 2017இன் முதல் ஏழுமாத காலப்பகுதியில் தேறிய உட்பாய்ச்சல்கள் 2016இன் இதையொத்த காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 387.5 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 483 மில்லியனைப் பதிவுசெய்திருந்தது. மேலும், 2017 யூலை காலப்பகுதியில் இலங்கையானது ஐ.அ.டொலர் 167.2 மில்லியன் கொண்ட தொகையினைப் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியவசதியின் மூன்றாம் கட்டமாக பெற்றுக்கொண்டது.

---

[1] இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அதன் சராசரித் தங்கியிருக்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரிச் செலவு தொடர்பான 2017ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பற்றிய அளவீட்டினை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்படும்.

[2] 2017 யூலைக்கான தொழிலாளர் பணவனுப்பல்களுக்கான தரவானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அறிக்கையிடப்பட்ட தரவுகளின் திருத்தங்கள் காரணமாக இலங்கை மத்திய வங்கி வாராந்த பொருளாதாரக் குறிகாட்டிகளில் முன்னதாக வெளியிடப்பட்ட பெறுமதிகளிலிருந்து திருத்தப்பட்டது.

**திரண்ட சென்மதி நிலுவை நிலைமை**

2017இன் முதல் ஏழுமாத காலப்பகுதிக்கான திரண்ட சென்மதி நிலுவை 2016இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 356.0 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,448.5 மில்லியன் கொண்ட மிகையினைப் பதிவுசெய்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**பன்னாட்டு ஒதுக்குகளும் செலாவணிவீத அசைவுகளும்**

2017 யூலை இறுதியில் இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 6.7 பில்லியனாக விளங்கி 3.9 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்ட வேளையில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 9.0 பில்லியனாக விளங்கி 5.3 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்டது.

2016 இறுதியிலிருந்து 2017 செத்தெம்பர் 27 வரையான ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 2.1 சதவீதத்தினால் மிதமான தேய்வொன்றினைப் பதிவுசெய்தது.

மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இக்காலப்பகுதியில் ரூபாவானது யூரோவிற்கெதிராக 12.5 சதவீதத்தினாலும் ஸ்டேர்லிங் பவுணுக்கெதிராக 10.6 சதவீதத்தினாலும் யப்பானியயென்னுக்கெதிராக 5.5 சதவீதத்தினாலும் கனேடியடொலருக்கெதிராக 10.3 சதவீதத்தினாலும் அவுஸ்திரேலியடொலருக்கெதிராக 10.1 சதவீதத்தினாலும் இந்தியரூபாவிற்கெதிராக 5.7 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது.

## அட்டவணை 3: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | யூலை 2016 ஐ.அ.டொ. மில் | யூலை 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - யூலை 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | சன - யூலை 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 891.5 (ஆ) | 1,015.9 | 13.9 | 6,021.8 (ஆ) | 6,413.4 | 6.5 |
| இறக்குமதிகள் | 1,432.8 | 1,591.1 | 11.1 | 10,753.8 | 11,742.2 | 9.2 |
| வர்த்தக மீதி (தேறிய) | -541.3 (ஆ) | -575.3 | - | -4,732.0 (ஆ) | -5,328.8 | - |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 359.2 (ஆ) | 352.5 | -1.8 | 2,013.5 (ஆ) | 2,086.1 | 3.6 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள்(இ) | 572.8 | 592.1 | 3.4 | 4,185.9 | 3,946.7 | -5.7 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | 10.1 | 23.4 | 132.0 | -30.8 | 252.7 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (உ) | 2,186.8 (ஆ) | 269.6 | -87.7 | 3,323.9(ஆ) | 3,651.8 | |
| இதில், | | | | | | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 308.4 | 203.9 | -33.9 | 909.5 | 933.7 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 1,500.0 | - | - | 1,500.0 | 1,500.0 | |
| நீண்ட காலக் கடன்கள் | 300.0 | - | - | 300.0 | 450.0 | |
| கூட்டிணைக்கப்பட்ட கடன்கள் | 377.3 (ஆ) | 65.7 | -82.6 | 897.6(ஆ) | 1,198.4 | |
| ப.நா.நி - வி.நி.நி.பெறுவனவுகள் | - | 167.2 | - | 168.1 | 167.2 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள்(ஊ) | - | - | - | 293.0 | 711.2 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
இலங்கையின் முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானது.

(ஆ) திருத்தப்பட்டது.

(இ) 2017 யூலைக்கான தொழிலாளர் பணவனுப்பல்களுக்கான தரவானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அறிக்கையிடப்பட்ட தரவுகளின் திருத்தங்கள் காரணமாக இலங்கை மத்திய வங்கி வாராந்த பொருளாதாரக் குறிகாட்டிகளில் முன்னதாக வெளியிடப்பட்ட பெறுமதிகளிலிருந்து திருத்தப்பட்டது.

(ஈ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(உ) அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மூலதனம் மற்றும் நடைமுறை மாற்றல்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் விற்பனையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்தின் கூட்டுக் கடன்கள் மற்றும் நீண்ட காலக் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

(ஊ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் உள்ளடக்குகிறது.